பக்கங்கள் 18+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | பங்குனி 15 சனிக்கிழமை 29.03.2025 | அதிர்வு 238

## இலங்கையில் இருந்து அவசரமாக ஓடித் தப்பிய இந்திய மீனவர் பிரதிநிதி

(ந.லோகதயாளன்)

இந்தியாவில் இருந்து மீனவர் பேச்சுவார்த்தைக்கு வருகை தந்த மீனவ சங்கப் பிரதிநிதி ஒருவரைக் கைது செய்ய முற்பட்டமையால்

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# இலங்கை – இந்தியா பாதுகாப்பு ஒப்பந்தம்

## மோடி வரும் போது கையெழுத்தாகும்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்த வாரம் இலங்கைகு வருகை தரும் போது இந்தியாவும் இலங்கையும் முதல் முறையாக ஒரு பெரியபாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடவுள்ளன என்று புதுடில்லியில் செய்திகள் வெளியாகியுளன.

கொழும்பு மீது சீனா தனது இராணுவ செல்வாக்கை அதிகரிக்க இடைவிடாத முயற்சிகளை எடுத்து வருவதாகக் கூறப்படுகையில் அதற்கு மத்தியில் கொழும்பு - புதுடில்லி பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் பற்றிய செய்தி வெளியாகியிருக்கின்றது.

02


## தமிழ்க் கட்சிகள் சார்பில் 7 பேர் மோடியைச் சந்திக்க அனுமதி

(ந.லோகதயாளன்)

இலங்கை வரும் இந்தியப் பிரதமரை இலங்கையின் தமிழ்க் கட்சிகள் சார்பில் 7 பேர் சந்தித்துக் கலந்துரையாட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் 4 ஆம் திகதி மாலை கொழும்புக்கு வருகை தந்து 6 ஆம் திகதி காலை இந்தியா திரும்புகின்றார். இதன்போது அவரைச் சந்திப்பதற்குச் சந்தர்ப்பம் கோரி பல தமிழ்த் தரப்புக்களும் கொழும்பில் உள்ள இந்தியத்

02



## தலைமன்னார் கடற்பரப்பில் மிதந்து வந்த கஞ்சா பொதிகள்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

தலைமன்னார் கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது, அந்தக்

02

# பிரிட்டனில் பிழை கண்டுபிடிக்க முன் நீங்கள் கூறியபடி புதிய அரசமைப்புப் பணியை உடனடியாக ஆரம்பியுங்கள்

## விஜிதவிடம் மனோ வேண்டுகோள்

பிரிட்டனில் பிழை கண்டுபிடிக்க முன் நீங்கள் கூறியபடி புதிய அரசமைப்புப் பணியை ஆரம்பியுங்கள் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் மனோ எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

“பிரிட்டன் அரசு சார்பாக பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் டேவிட் லெம்மி அறிவித்த தடைகள், இலங்கையில் தேசிய நல்லிணக்கச் செயற்பாட்டை குழப்புகின்றது என இலங்கை வெளிநாட்டமைச்சர் நண்பர் விஜித ஹேரத் கூறுகின்றார். டேவிட் லெம்மி, தான் இதை தம் தேர்தல் பிரசாரத்தின் போது தந்த வாக்குறுதிகளுக்கு ஏற்பவே செய்துள்ளதாகவும் கூறுகின்றார்.

இந்நிலையில், நண்பர் விஜித ஹேரத்திடம் நான் கேட்க விரும்புகின்றேன். உங்கள் தேர்தல் பிரசாரத்தின் போது நீங்கள் உறுதியளித்த, அரசமைப்பு செயற்பாடு, இன்று எங்கே?

இன்று இந்நாட்டில் இனவாதம் பகிரங்கமாகப் பேசப்படுவதில்லை. அதற்கு காரணம் ஜே.வி.பி. அல்ல. அன்று நாட்டில் நடைபெற்ற “அரகல” என்ற போராட்டத்தின்போது, அதற்கு



முன் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்த பெரும்பாலான சிங்கள இளையோர், இனி இனவாதம் சரி வாராது என்று கை விட்டு விட்டார்கள். அது நல்லது. ஆனால், அது மட்டும் நிரந்தர நல்லிணக்கத்தைக் கொண்டு வராது. நிலைமை மீண்டும் மாறலாம்.

ஆகவே காலம் கடக்கும் முன், நீங்கள் உறுதி அளித்தபடி, நல்லாட்

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

## இலங்கை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏப்ரல் 5 ஆம் திகதி கொழும்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, இலங்கையின் கடனை மறுசீரமைப்பது உள்ளிட்ட பல இருதரப்பு ஒப்பந்தங்களை இரு தரப்பினரும் உறுதிப்படுத்த வாய்ப்புள்ளது என்று கூறப்படுகின்றது.

அதில் முக்கியமான ஒன்றே இரு தரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் என்று கூறப்படுகின்றது.

இதனை புதுடில்லியில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில், இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி கோடி காட்டினார்.

பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்றார் அவர்.

இந்தப் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானால், இந்தியா – இலங்கை பாதுகாப்பில் ஒரு பெரிய முன்னேற்றப் பாதையை அது குறிக்கும். இது,சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை நாட்டிலிருந்து இந்திய அமைதி காக்கும் படையை இந்தியா வெளியேற்றியமை தொடர்பான கசப்பான பாதுகாப்பு அத்தியாயத்தை இரு பக்க பரஸ்பர புரிந்துணர்வோடு மாற்றி எழுத வாய்ப்பளிக்கும் என இந்திய நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

முன்மொழியப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்த விரிவான விவரங்கள் உடனடியாகக் கிடைக்கவில்லை, ஆனால், இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் சீனாவின் பிரசன்னம் அதிகரித்து வரும் பின்னணியில் இரு தரப்பு பாதுகாப்பு ஈடுபாடுகளை இது மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## தமிழ்க்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதரகத்தை நாடியுள்ளனர்.

இதற்கமைய தமிழர் தரப்பில் 7 பிரதிநிதிகள், மோடியைச் சந்திப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் 4 பேரும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) சார்பில் ஒருவரும், ஜன நாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் இருவருமாக இந்த 7 பேரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் சி.வி.கே.சிவஞானம், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன் மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோரும், அகில இலங்கை தமிழக காங்கிரஸ் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் செல்வம் அடைக்கலநாதனுடன் பங்காளிக் கட்சித் தலைவர்களில் ஒருவருமாக இந்த 7 பேரும் மோடியைச் சந்திக்கவுள்ளனர்.

இந்தச் சந்திப்பு கொழும்பில் எதிர்வரும் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் உடனடியாகவே இலங்கையை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

இந்தியாவில் இருந்து இலங்கை மீனவர்களுடன் பேச்சு நடத்த இந்திய மீனவர்கள் ஐவர் இலங்கை வந்திருந்தனர்.

இவ்வாறு வருகை தந்திருந்த ஐந்து இந்திய மீனவர் பிரதிநிதிகளில் ஒருவரின் படகு கடந்த பெப்ரவரி மாதம் மன்னார் கடற்பரப்பில் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு அதில் இருந்த மீனவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதோடு படகு உரிமையாளர் முதலாம் எதிரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

முதலாம் எதிரியாக பெயர் குறிப்பிட்ட ஒருவரே இந்தியாவில் இருந்து வருகை தந்த ஐவரில் ஒருவர் என்பதனை அறிந்த மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் இந்த விடயத்தை தமது தலைமைக் காரியாலயம் ஊடாக அவசரமாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றது.

இதன் அடிப்படையில் படகின் உரிமையாளரும் இந்தியாவில் இருந்து வருகை தந்த இராமேஸ்வரம் விசைப் படகு உரிமையாளர் சங்கத் தலைவருமான ஜேசுராசாவைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களம் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்துக்கு எழுத்தில் உத்தரவிட்டது.

இந்த உத்தரவு உரிய திணைக்களம் ஊடாக மன்னார் நீதிமன்றத்தின் கவனத்துக்குச்செல்ல முன்பு இந்தியாவில் இருந்து வருகை தந்த மீனவர் குழுவின் கவனத்துக்குச் சென்றதனால் நேற்று மாலை விமானத்தில் ஜேசுராசா அவசரமாக இந்தியா திரும்பியுள்ளார்.

## தலைமன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்பகுதியில் மிதந்து கொண்டிருந்த கேரள கஞ்சா பொதிகளைக் கடற்படையினர் மீட்டுள்ளனர்.

தலைமன்னார், மணல் திட்டு 1 மற்றும் 2 இற்கு இடையிலான கடல் பகுதியில், வட மத்திய கடற்படைக் கட்டளையின் இலங்கைக் கடற்படைக் கப்பல் தம்மென்னாவுடன் இணைக்கப்பட்ட சிறப்பு கப்பல் ரோந்துக் குழுவை நிலைநிறுத்தி விசேட தேடுதல் நடவடிக்கை நேற்று மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த கடல் பகுதியில் மிதந்து கொண்டிருந்த 46 சந்தேகத்துக்கிடமான பொதிகளை அவதானித்துச் சோதனை செய்தபோது, அந்தப் பொதிகளில் பொதி செய்யப்பட்டிருந்த சுமார் 124 கிலோகிராம் மற்றும் 392 கிராம் கேரள கஞ்சாவை (ஈரமான எடையுடைய) கடற்படையினர் கைப்பற்றினர்.

இதன் மதிப்பு 49 மில்லியன் ரூபாவுக்கும் மேல் இருக்கும் எனத் தெரிய வருகின்றது.

மேலும், கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா பொதிகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகத் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன.






## ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனத்தைப் போன்று

# வடக்கில் மூடப்பட்ட தொழிற்சாலைகளை மீளவும் ஆரம்பிப்பதற்கு அரசு நடவடிக்கை

### ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

"ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனத்தை மீள ஆரம்பித்ததைப் போன்று வடக்கில் போர் காரணமாக மூடப்பட்ட தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதன் ஊடாக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளையோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவுள்ளதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான வடக்கின் பங்களிப்பும் அதிகரிக்கும்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

தேசிய உப்பு நிறுவனத்தின் ஆனையிறவு உப்பு உற்பத்தி தொழிற்சாலையில் மேசை உப்பு உற்பத்தியை ஆரம்பிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை இடம்பெற்றது. கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, கடற்றொழில் நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் ஆகியோரின் பங்கேற்புடன் இந்த நிகழ்வு ஆனையிறவில் நடைபெற்றது. தொழிற்சாலையை விருந்தினர்கள் இணைந்து சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்த பின்னர் மேடை நிகழ்வுகள் நடைபெற்றன.

தேசிய உப்பு நிறுவனத்தின் தலைவர் கயான் வெல்லால தனது வரவேற்புரையில், மன்னாரில் உப்பு உற்பத்தி செய்யப்பட்டாலும் அதனை விட ஆனையிறவு உப்பே தரமானது எனக் குறிப்பிட்டார். தற்போது பொருத்தப்பட்டுள்ள நவீன இயந்திரங்கள் மூலம் மணித்தியாலத்துக்கு 5 மெட்ரிக் தொன் மேசை உப்பை உற்பத்தி செய்யமுடியும் எனவும் தெரிவித்தார்.

2026ஆம் ஆண்டிலிருந்து உப்பை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் தனது உரையில்,

"வடக்கு மாகாணத்து இளையோருக்கு வேலைவாய்ப்பை வழங்கிய பல தொழிற்சாலைகள் போரினால் மூடப்பட்டுள்ளன. இதனால் வேலைவாய்ப்பின்மை எமது மாகாணத்தில் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. அரசு பதவிக்கு வந்த பின்னர் ஆனையிறவு உப்பு தொழிற்சாலையை மீள முழு வீச்சில் இயக்க ஆரம்பித்திருக்கின்றது.

ஆனையிறவு உப்புக்கு தனித்துவமான மதிப்பு இருக்கின்றது. அந்தவகையில் இதை மீளச் செயற்படுத்துவதானது சிறப்பானது.

எதிர்காலத்தில் ஆனையிறவு உப்பை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் ஊடாக எமது மாகாணம் மேலும் வளர்ச்சிப்பாதையில் பயணிக்கும்." – என்றார்.

கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தனது உரையில்,

"இன்றைய நாள் உங்களுக்கும், எங்களுக்கும் ஒட்டுமொத்த இலங்கையர்களுக்கும் மகிழ்ச்சியான நாள். பல இன்னல்களைச் சந்தித்தாலும் எமது மண்ணின் வாசத்தை பரப்பியது ஆனையிறவு உப்புத்தான். பலரும் விரும்பிப் பயன்படுத்து ஆனையிறவு மேசை உப்பு மீண்டும் உங்கள் கைகளுக்கு வரப்போகின்றது. ஆனையிறவு உப்புக்கு தனியான 'மவுசு' உண்டு. விரைவில் ஆனையிறவு உப்பு என்ற பெயரில் உலகம் எங்கு இது விற்பனையாகும்." – என்றார்.

இங்கு உரையாற்றிய அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி,

"இன்றைய நாள் எல்லோருக்கும் மகிழ்ச்சிக்குரிய நாள். எமது அரசு பதவிக்கு வந்த 5 மாதங்களில் இந்தத் தொழிற்சாலையை திறந்து வைத்திருக்கின்றோம். கடந்த காலங்களில் இங்கு உற்பத்தி செய்யப்படும் உப்பை வேறு தரப்புக்கள் கொள்வனவு செய்து வெவ்வேறு பெயர்களில் விற்பனை செய்தார்கள். இப்போது இங்கிருந்தே மக்களுக்கு உப்பை விற்பனை செய்யும் வகையில் நாம் மாற்றியமைத்துள்ளோம்." – என்றார்.

---

## பிரிட்டனில் ...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

சியில் 2018ஆம் ஆண்டளவில் இடைநிறுத்தப்பட்ட, புதிய அரசமைப்பு செயற்பாட்டை, நின்ற இடத்தில் இருந்து முன்னெடுங்கள். அதைத் தானே நீங்கள் உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில், பிரசாரத்தில் சொல்லி வாக்கு வாங்கினீர்கள்? அதைச் செய்யாமல், இன்று நடக்காத உங்கள் தேசிய நல்லிணக்கச் செயற்பாட்டை, பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் டேவிட் லெம்மி தடைகளை அறிவித்து குழப்புவதாகக் கூறுவது வேடிக்கையாகும்." – என்றார்.

இது தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் மனோ எம்.பி. மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"பொறுப்புக்கூற வேண்டியவர்கள் சட்ட விலக்குப் பெற இடம் தர மாட்டோம்" என்ற தமது தேர்தல் பிரசார வாக்குறுதிக்கு அமைவாக, பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் டேவிட் லெம்மி, இலங்கையின் பிரஜைகள் நால்வருக்கு எதிராக அறிவித்த தடைகள் இலங்கையின் தேசிய நல்லிணக்க முயற்சிகளைக் குழப்புவதாக தனது "அங்கேயும் இல்லாத, இங்கேயும் இல்லாத" பதிலில் இலங்கை வெளிநாட்டமைச்சர் நண்பர் விஜித ஹேரத் கூறுகின்றார்.

அமைச்சரே, உங்கள் தேர்தல் பிரசாரத்தின்போது நீங்கள் உறுதியளித்த, அரசமைப்பு செயற்பாடு, இன்று எங்கே? அதை உங்களை அரசு காலவரையின்றி ஒத்திவைத்து விட்டது. நல்லாட்சியில் 2018 ஆண்டளவில் இடைநிறுத்தப்பட்ட, புதிய அரசமைப்பு செயற்பாட்டை, நின்ற இடத்தில் இருந்து முன்னெடுப்போம் என்பது உங்கள் தேர்தல் கால வாக்குறுதி. ஜனாதிபதி அநுரகுமாரவுடன், அந்தப் புதிய அரசமைப்பு வழிகாட்டல் குழுவில் நான், நண்பர்கள் ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதுர்தீன், சுமந்திரன் ஆகியோர் கூட்டாகச் செயற்பட்டோம்.

ஆகவே காலதாமதம் ஏற்பட முன், உடனடியாக புதிய அரசமைப்பு பணிஜ ஆரம்பித்து தேசிய நல்லிணக்க இலங்கை அடையுங்கள். அதுதான் பிரிட்டிஷ் அரசுக்கு நீங்கள் தர கூடிய சரியான பதிலாக இருக்க முடியும்." – என்றுள்ளது.



# இளைஞர் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் மன்னாருக்கு திடீர் விஜயம்!

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள விளையாட்டு கழகங்களின் பிரதி நிதிகளை சந்திக்கும் வகையிலும், மன்னார் மாவட்டத்தில் இளைஞர்கள் விளையாட்டு துறை சார்பாக எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று (29) இளைஞர் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் சுனில் குமார கமகே மேற் கொண்டிருந்தார்.

மன்னார் பள்ளிமுனை விளையாட்டு மைதான பார்வையாளர் அரங்கில் இடம் பெற்ற குறித்த சந்திப்பில் மன்னார் மாவட்ட விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகள், இளைஞர்கள்,தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போது நீண்ட காலமாக கட்டுமாகப் பணிகள் பூர்த்தி செய்யப்படாது காணப்படும் நறுவிலிக்குளம் சர்வதேச விளையாட்டு மைதான பணிகளை விரைவில் மீண்டும் ஆரம்பிக்க உள்ளார் என்று அமைச்சர் தெரிவித்திருந்தார்.

அதேநேரம் குறித்த மைதானத்தின் தற்போதைய நிலை தொடர்பில் பார் வையிடுவதற்காக அமைச்சர் தலை மையிலான குழுவினர் நறுவலிக்குளம் சர்வதேச மைதான பணிகள் இடம்பெற்று வரும் பகுதிக்கு சென்றிருந்தனர்.












# யாழில் மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் பரிதாப உயிரிழப்பு

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணத்தில் இன்று சனிக்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் மற்றுமொரு இளைஞர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஏழாலை தெற்கைச் சேர்ந்த சிவராசா பிரவீன் (வயது 19) எனும் இளைஞரே உயிரிழந்துள்ளார்.

கந்தரோடைப் பகுதியில் வேகமாகப் பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்டதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சுன்னாகம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.




# திருமலை கோணேஸ்வரப் பெருமான் ஆலய திருவிழா ஏப்ரல் 11 ஆரம்பமாகிறது

(எஸ்.கீதபொன்கலன்)

தெட்சணகைலாயம் என்னும் திருகோணமலையில் அருளாட்சி புரியும் அருள்மிகு மாதுமை அம்பாள் உடனுறை கோணேஸ்வரப் பெருமான் ஆலய பிரமோற்ஸவம் எதிர்வரும் ஏப்ரல் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 16 நாள்கள் திருவிழா இடம்பெற்று ஏப்ரல் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்குத் தேர்த் திருவிழாவும், 28 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 7 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெற்று இரவு கொடியிறக்கம் இடம்பெறும்.

29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும்.

மஹோற்சவ காலங்களில் தினமும் காலை 8 மணிக்கு



அபிஷேகம், பிற்பகல் 3.30 மணிக்கு அபிஷேகம், மூலஸ்தான பூஜை, தம்ப பூஜை, வசந்த மண்டப பூஜை இடம்பெற்று வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார்.

காலை உற்சவத்தின் பின்பு பக்த அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். மாலை உற்சவங்களின் பின் ஆலயத்தில் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தமிழர்கள்தான் பாவம்...!

'சோழியன் குடுமி சும்மா ஆடுவதில்லை.' காரணத்துடன்தான் ஆடும்.

சர்வதேச விவகாரங்களில் உலக நாடுகளின் உறவாடல் கூட அப்படித்தான். தத் தமது சுயநலம் சார்ந்ததாகவே அவை முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கையில் பாதிக்கப்பட்ட சிறுபான்மையினரான தமிழர்கள் குறித்து இந்தப் பிராந்தியத்தின் வல்லாதிக்க நாடான இந்தியா சிரத்தை கொள்வதாகக் காட்டிக் கொள்வது கூட அதன் பாதுகாப்பு சுயநலன் சார்ந்த நடவடிக்கை என்பது வெள்ளிடைமலை.

எழுபதுகளிலும் எண்பதுகளிலும் தமிழ்ப் போராளிகளுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்தமை முதல் பின்னர் அதே போராளிகள் மீது இந்திய அமைதிப் படை என்ற பெயரில் இராணுவத்தை அனுப்பிப் போர் தொடுத்தமை வரை - இப்போது தமிழர்களின் அதிகார பகிர்வு பற்றி அவ்வப்போது பேசிக் கொண்டு, மறுபுறத்தில் அதைப் பேரம் பேசும் விவகாரமாக வைத்துக் கொண்டு தன்னுடைய பாதுகாப்பு நலன் விடயங்களை நகர்த்துவது வரை - எல்லாமுமே இந்தியா தனது புவியியல் கேந்திர பாதுகாப்பு நலன் கருதி நகர்த்திய, நகர்த்துகின்ற விடயங்கள்தான்.

இதுவரை காலமும் இலங்கையின் சிறுபான்மையினரான ஈழத்தமிழர்களின் நலனை தன்னுடைய பாதுகாப்பு அம்சங்களுக்கான துரும்புச் சீட்டாகப் பயன்படுத்திய இந்தியா, இப்போது அது இனி பயன்படாது என்ற நிலையில், அதனை கைவிட்டு வேறு வழிமுறைகளை - மார்க்கத்தை - நாட முற்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் - உலக மகா யுத்தங்களின் சமயத்தில் - தன்னுடைய பாதுகாப்பு நலனுக்காக கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளை ஒன்றிணைத்து, நேட்டோ கட்டமைப்பை ஏற்படுத்தி, அதன் முடிசூடா மன்னனாக செயல்பட்ட அமெரிக்கா, இப்போது தன்னுடைய வர்த்தக, பொருளாதார நலன்களுக்கும் பாதுகாப்பு விவகாரங்களுக்கும் ஏற்ப நேட்டோ நாடுகளையே ஏறி மிதித்து காய் நகர்த்த முற்படுவது வெளிப்படையானது.

இப்படிப் பிராந்திய வல்லரசுகள் தத்தமது நலனுக்காக பிற தேசியங்களை, பிற நாடுகளை, பிற கட்டமைப்புகளை பந்தாடுவது உலக சரித்திரத்தில் வழமை தான்.

தன் பாதுகாப்பு நலனுக்காக இலங்கை விவகாரத்தை தனக்கேற்ற வகையில் வளைத்து போட்டு வரும் இந்தியா, இப்போது அதே நோக்கத்துக்காக முதல் தடவையாக இலங்கையுடன் மீண்டும் பெரிய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிட இருப்பதாக செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

எண்பதுகளில் தமிழ்ப் போராளிகள் இயங்களுக்கு ஒளிவு, மறைவாக ஆயுதப் பயிற்சி அளித்து, அவற்றின் மூலம் கொழும்புக்கு அழுத்தம் கொடுத்து, 1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு கொழும்பை அடிபணிந்து வரச் செய்த புதுடில்லி அதன் பின்னர் இலங்கைக்குள் இந்திய படைகளை அமைதிப் படைகள் என்ற பெயரில் நிலை கொள்ளச் செய்வதில் வெற்றி கண்டது.

பின்னர் அந்தப் படைகளை கசப்பான அனுபவங்களோடு வெளியேற்ற வேண்டிய நிலைமை வந்த பின்பு, தொடர்ந்தும் ஈழத் தமிழர் நலன் என்று காய்நகர்த்தலோடு அவ்வப்போது கொழும்புக்கு தெண்டல் போட்டு நொட்டிக் கொண்டிருந்தது இந்தியா.

இப்போது இலங்கையோடு இந்தியா நேரடியாகப் பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து இணக்கம் காணும் நிலைமை வந்திருப்பதாகக் கூறப்படுகின்றது. அப்படி உடன்பாடு காணப்படுமானால், இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் சீனாவின் பிரசன்னம் அதிகரித்து வரும் பின்னணியில், இலங்கையிலும் சீனாவின் பாதுகாப்பு ஆதிக்கம் செல்வாக்கு செலுத்துவதை ஒருவாறு தடுப்பதில் புதுடில்லி திருப்தி காணும் சூழல் ஏற்படும்.

அத்தகைய சூழல் ஏற்பட்டு, இந்தியப் பாதுகாப்புக்கு இலங்கையில் சீன ஆதிக்கத்தினால் அச்சுறுத்தல் இல்லை என்ற நிலை உருவாகுமானால், புதுடில்லி அதன் பின்னர் இலங்கை தீவில் பெரிதும் பரிவுக்குரிய பாத்திரமான ஈழத் தமிழர்கள் குறித்து அலட்டிக் கொள்ளப் போவதேயில்லை என்பது நிச்சயமாகிவிடும்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்




# ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் வேட்பாளர் அறிமுகம் கிண்ணியாவில்

(எச். எம். ஹலால்தீன் )

கிண்ணியாவில் ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் வேட்பாளர் அறிமுகம் நேற்று (28) மாலை நான்கு மணிக்கு கிண்ணியா பெரியாற்று முனையில் அமைந்துள்ள பல் தேவைக் கட்டடத்தில் நடைபெற்றது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மூதூர் தொகுதியின் பிரதான அமைப்பாளர் இப்ராஹிம் சதாத் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் மூதூர் தொகுதி வேட்பாளர்கள் கலந்து கொண்டனர். மூதூர் தொகுதிக்கான கிண்ணியா நகர சபை, கிண்ணியா பிரதேச சபை, மூதூர் பிரதேச சபை ஆகிய சபைகளுக்கான வேட்பாளர்கள் அறிமுகம் நடைபெற்றது.

இந்த முறை மூதூர், கிண்ணியா சபைகளில் நாங்கள் வெற்றி பெறுவோம் என்றும் அதற்கான சகல வியூகங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

இந்த அரசினுடைய கொள்கை, கோட்பாடுகள் அனைத்தும் மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளன

ஆகவே மக்கள் மத்தியில் இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லாததால் இந்த முறை உள்ளூராட்சி சபைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். அதற்கான செயற்பாடுகளையும் எமது வெற்றியையும் முன்னோக்கி எடுத்துச் செல்வது எமது கடமையாகும் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மூதூர் தொகுதியின் பிரதான அமைப்பாளர் இப்ராஹிம் சதாத் தெரிவித்தார்.



## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்





# தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்தது இ.தொ.கா.!

2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான முதல் பிரச்சாரத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இன்று (29) சனிக்கிழமை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்தது.

கொட்டகலைஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்தில் இன்று (29) இடம்பெற்ற சிறப்பு வழிப்பாட்டு பூஜைகளுடன், நடைபெறவுள்ள 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பிரச்சார பணிகளை ஆரம்பித்தது.

தொடர்ந்து தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுடனான சந்திப்பொன்றும் கொட்டகலை சி.எல்.எப். வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் போது இ.தொ.காவின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், தலைவர் செந்தில் தொண்டமான், தவிசாளரும் நிதிச் செயலாளருமான மருதப்பாண்டி ராமேஸ்வரன், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



நடைபெறவுள்ள 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இந்த முறை, கொட்டகலை, நோர்வூட், மஸ்கெலியா, அக்கரபத்தனை, நுவரெலியா, ஹட்டன்-டிக்கோயா, தலவாக்கலை-லிந்துலை, அம்பகமுவ, கொத்மலை, ஹங்குராகெத்த, நுவரெலியா மாநகர சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களில் சேவல் சின்னத்திலும், வலப்பனை பிரதேச சபையில் நாற்காலி சின்னத்திலும் போட்டியிடுகின்றது.

இதில் மஸ்கெலியா மற்றும் கொத்மலை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களின் வேட்புமனுக்கள் ஒரு சில முறனான காரணங்களால் நிராகரிக்கப்பட்டிருந்த நிலையில், நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கல் தொடர்பில் இ.தொ.கா. சார்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# காரைதீவு பிரதேச சபையை இந்த முறையும் இலங்கை தமிழரசுக் கட்சியே கைப்பற்றும்!

## அறிமுக விழாவில் வேட்பாளர் ஜெயசிறில் சூளுரை

( வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை தமிழரசுக் கட்சி காரைதீவு பிரதேச சபையை வழமைபோல் இந்த முறையும் கைப்பற்றும்.

இவ்வாறு காரைதீவில் நேற்று (28) வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு கிளைத் தலைவரும், முன்னாள் தவிசாளரும், வேட்பாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் சூளுரைத்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சி காரைதீவு பிரதேச சபையில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுகமும் ஆலய விசேட பூஜைகளும் காரைதீவு ஸ்ரீ பாலையடி வால விக்னேஸ்வர் ஆலயத்தில் நடைபெற்றன.

கிழக்கிலங்கையில் பிரபல குருக்களும், ஆலய பிரதம குருவுமான சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் முன்னிலையில் பொங்கல் பொங்கி விசேட பூஜைகள் நடைபெற்றன. தொடர்ந்து வழிபாடுகள் இடம் பெற்றன .

அதனை தொடர்ந்து வேட்பாளர் அறிமுகம் தொடர்பாக முன்னணி வேட்பாளர் கி.ஜெயசிறில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ச்சியாக இலங்கைத் தமிழரசுக் கட்சி காரைதீவு பிரதேச சபையைக் கைப்பற்றி வருகின்றது. இந்த முறையும் இலங்கை தமிழரசுக் கட்சியே காரைதீவு பிரதேச சபையில் ஆட்சி அமைக்கும்.

அதே போன்று அம்பாறை மாவட்டத்திலும் அதிகப்படியான உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றும். ஏன் என்றால் இங்கு உண்மையான உணர்வுள்ள தமிழர்கள் இருக்கின்றனர்.

அவர்கள் இனம் சார்ந்து நிலம் சார்ந்து சிந்திக்கின்றார்கள். எமது மக்களை எமது மக்கள்தான் ஆள வேண்டும்.

சிலர் இன்னும் பெரும்பான்மை கட்சிகளோடு இணைந்து எம் மக்களை ஏமாற்றி வருகிறார்கள். இந்தக் கோடரிக் காம்புகளின் கடந்த கால அனுபவங்கள் போதாதா? சிந்தித்து பாருங்கள்.

எந்த அமைச்சர் வந்து இங்கு என்னத்தை செய்தார்? நேற்று முன்தினம் கூட ஒரு அமைச்சர் வந்தார். இவர்களால் என்ன செய்ய முடியும்?

இவர்களது அபிவிருத்தி என்ற மாயையும் பசப்பு வார்த்தைகளையும் நம்ப காரைதீவு மக்கள் ஒருபோதும் தயார் இல்லை என்பதை எதிர்வரும் மே மாதம் ஆறாம் திகதி எடுத்துக்காட்டுவார்கள்.

நாம் தூய்மையான அரசியலை முன்னெடுத்து நிலையான அபிவிருத்தியை நோக்கி எமது இருப்பைத் தக்க வைக்கும் நோக்கில் செயற்படுவோம். – என்றார்.







# ஜீ.ஐ.இசட் அமைப்பின் நிதி உதவியில் புத்தள இளைஞர் கலாச்சார நிகழ்வுகள்

(ரஸீன் ரஸ்மின்)

ஜீ.ஐ.இசட் அமைப்பின் நிதி உதவியில் விழுது நிறுவனத்தின் புத்தளம் மாவட்ட ஐடோ இளைஞர்களால் கலாச்சார நிகழ்வு செவ்வாய்க்கிழமை (25) புத்தளம் – வேப்பமடு முஸ்லிம் வித்தியாலயத்தில் நடத்தப்பட்டது.

“ஓரங்கட்டப்பட்ட சமூகத்தினரை ஒன்றிணைக்கும் எங்கள் குரல்” எனும் கருப்பொருளில் மக்களிடையே கலாச்சார, சமய ரீதியான முரண்பாடுகளை களைந்து சமயங்களுக்கு இடையில் நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் இந்த நிகழ்வு நான்கு மத சமயத் தலைவர்களின் ஆசியுடன் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் புத்தளம் பிரதேச செயலகத்தின் மேலதிக மாவட்ட பதிவாளர் ஜகத் புஷ்பகுமார, புத்தளம் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் பிரஜா பொலிஸ் பிரிவு உத்தியோகத்தர் ரவீந்திர சமரவீர, மணல்தீவு கிராம உத்தியோகத்தர் முஹம்மது அர்ஷாத், கரைத்தீவு வடக்கு கிராம உத்தியோகத்தர் பாத்திமா சப்னா, அபிவிருத்தி உத்தியோகத்தர் எச்.எச்.எம். ஹமாஸ், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே.எம்.ஜெஸீம் உட்பட புத்தளம் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

புத்தளம் – மணல்தீவு கிராமத்தைச் சேர்ந்த மக்கள் பெரும் எண்ணிக்கையிலானோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, அரச சேவையை பெற்றுக் கொள்ளும் நடைமுறைகள் மற்றும் சேவைகள் தொடர்பான ஆலோசனைகள், ஒன்றிணைந்த கலாச்சார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மேலும் முஸ்லிம் மக்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் புனித நோன்பு தொடர்பான தெளிவுறையும் இதன்போது வழங்கப்பட்டதுடன் இப்தார் நிகழ்வுக்கான உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன.

அது மாத்திரமின்றி, பொலிஸ் – பொதுமக்கள் இடையில் காணப்படும் நல்லுறவு , பொலிஸாரின் செயற்பாடுகள் பற்றி மக்களிடையே காணப்படும் பிரச்சினை, குடும்ப ஒற்றுமை தொடர்பிலும் புத்தளம் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் பிரஜா பொலிஸ் பிரிவு உத்தியோகத்தர் ரவீந்திர சமரவீர தெளிவுபடுத்தினார்.

பிறப்புச் சான்றிதழ் பெற்றுக் கொள்வது தொடர்பில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் புத்தளம் பிரதேச செயலகத்தின் மேலதிக மாவட்ட பதிவாளர் ஜகத் புஷ்பகுமாரவால் விளக்கமளிக்கப்பட்டது. பிறப்புச் சான்றிதழ் பெற்றுக் கொள்வது தொடர்பில் பொது மக்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

பிறப்புச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு ஆலோசனைகளும் வழங்கப்பட்டதுடன் , அதற்கான விண்ணப்ப படிவங்களும் புத்தளம் பிரதேச செயலகத்தினால் இதன்போது விநியோகிக்கப்பட்டன.

இன ஒற்றுமையையும் சமய நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் வகையில் குறித்த அமைப்பினர் ஒவ்வொரு மாவட்டங்களிலும் இவ்வாறான நிகழ்வுகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறை சுப்பர்மடம் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம் காலவரையற்று மூடப்பட்டது

பருத்தித்துறை சுப்பர்மடம் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம் நேற்று மாலை5மணியிலிருந்துகாலவரையற்ற வகையில் மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி, கடற்றொளிலாளர் கூட்டுறவு சங்கத்தின் அங்கத்தவர்கள் சிலரால் தொடர்ச்சியாக சங்கத்துக்கு அவதூறு பரப்பும் செயற்பாடு மற்றும் அடாவடிகளில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இந்த நிலையில், மேற்படி நபர்களின் செயற்பாடுகளால் சங்கத்தை தொடர்ந்து இயக்க முடியாது என்று நீரியல் வளத்துறை திணைக்களம் மற்றும் பிரதேச செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என சங்க அங்கத்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சுப்பர்மடம் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் முத்துக்குமார் சிவகுமார் நேற்று மாலை பருத்தித்துறையிலிருந்து அவரது வீட்டுக்கு சென்றுகொண்டிருந்தபோது இருவர் அவரை வழிமறித்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனையடுத்து, சுப்பர்மடம் பகுதி மக்கள் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துக்கு மேற்படி விடயம் தொடர்பில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளனர்.

இதனையடுத்து, பருத்தித்துறை பொலிஸார் மேற்படி சங்கத்தின் உறுப்பினர்களிடம் வாக்குமூலம் பெற்றதுடன், தாக்குதல் நடத்திய இருவரையும் கைது செய்துள்ளனர். தாக்குதலுக்கு உள்ளான சுப்பர்மடம் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் முத்துக்குமார் சிவகுமார் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.



# கிண்ணியா பிரதேசத்தில் 2024 இல் 71 பேர் தற்கொலைக்கு முயற்சியில்!

## உளநல ஆரோக்கிய வைத்திய அதிகாரி நஸ்மி தகவல்

(எச் எம் ஹலால்தீன்)

கிண்ணியா பிரதேசத்தில், 2024 ஆம் ஆண்டு, தங்களை தாங்களே பல முறைகளில், துன்புறுத்தி தற் கொலை செய்ய முயற்சித்த 71 பேர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கின்றனர் என்று கிண்ணியா தள வைத்திய சாலையின் உளநல ஆரோக்கிய வைத்திய அதிகாரி ஏ. கே. எம். நஸ்மி தெரிவித்தார்.




கிண்ணியா தள வைத்தியசாலையில் உளநல சிகிச்சைக்காக, 'ரம்மிய இல்லம்' என்ற பெயரில் பிரிவு ஒன்று புதன்கிழமை (26) புதிதாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தப் பிரிவு, வைத்தியசாலையின், வைத்திய அத்தியேட்சகர் டி.எச்.நயன சந்திரதாசவால் திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது அவர் இவ்வாறு தெரி வித்தார். மேலும் அவர் கூறுகையில்,

இவ்வாறு உளநலம் பாதிக்கப்பட்ட வர்கள் 20 தொடக்கம் 22 வயதுக்கு உட்பட்டவர்கள். அவர்கள், இன் றைய நவீன சூழலால் அதிகம் பாதிக் கப்பட்டவர்களே.

அத்துடன்போதைபொருள்பாவனை, இளம் வயது திருமணத்தில் பின்னர் ஏற்படும் பிரச்சினைகள், சமூக ஊடகங் களின் தாக்கங்கள் இவர்களை இந்த நிலைமைக்கு ஆளாக்கிருப்பதையும் அவதானிக்க கூடியதாக இருந்தது.

கிண்ணியா பிரதேசத்தைப் பொறுத்த வரை, 2021 ஆண்டை விட, 2024 ஆண்டு உளநல சேவையை பெற எமது பிரிவுக்கு வருகை தந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பது ஒரு முக்கியமான அம்சமாகும்.

2021 ஆண்டு 40 பேர் இங்கு சிகிச்சை பெற வந்தனர். 2024 ஆண்டு, 130 இற்கும் மேற்பட்டவர்கள் தாமாக முன்வந்துசிகிச்சைபெற்றிருக்கின்றனர்.

விஞ்ஞான ரீதியாக சிகிச்சை அளித்து, உளநலம் பாதிக்கப்பட்டவர் களை குணமாக்க முடியும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் ஏற்பட் டிருப்பது இதன் மூலம் தெளிவாகின்றது. இந்த விடயம் ஒரு மகிழ்ச்சிகரமான விடயமாகும்.

மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் தாமாக முன்வந்து சிகிச்சை பெறு வதற்காகவே அந்த பிரிவை தற்போது நாங்கள் ரம்மிய இல்லமென மாற்றி யிருக்கிறோம்.

எனவே, இவ்வாறான பிரச்சினைக ளால் பாதிக்கப்பட்டவர்களை முன்கூட் டியே அவதானித்து, இங்கு கொண்டு வந்து சிகிச்சை அளிப்பதன் மூலம் அவர்களை, குணமாக்க முடியும் என் பதை பெற்றோர்கள் அறிந்திருக்க வேண்டும். பாடசாலைகளும் இதனை அறிந்திருப்பது அவசியமாகும்.- என்றார்.







# புதிய கட்சிக்கான விண்ணப்பம் தேர்தல் ஆணைக் குழுவில்!

(அபு அலா )

இலங்கையில் தேசிய ரீதியாக உருவெடுக்கும் புதிய கட்சியான தேசிய மக்கள் முன்னணி கட்சியை பதிவு செய வதற்கான விண்ணப்பத்தைக் கட்சியின் தேசிய தலைவர் பொறியியலாளர் அல்-ஹாஜ் உதுமான்கண்டு நாபீர் தேர்தல் ஆணைக்குழுவில் நேற்று (28) கையளித்து வைத்தார்.

இதன்போது கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.நௌஷாட் மற்றும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் கட்சியின் தேசிய அமைப்பாளருமான சட்டத்தரணி எம். எல்.துல்கர் நயீம் ஆகியோர் கலந்துகொண்டனர்.





Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Haram NEK 318
Haram NEK 473
Haram NEK 477
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555





# பொதுப் போக்குவரத்து நடைமுறைகளை சீர்செய்யும் நடவடிக்கை கல்முனையில்

**(பாறுக் ஷிஹான்)**

எதிர்வரும் நோன்புப் பெருநாள் மற்றும் சித்திரை புத்தாண்டுகளை முன்னிட்டு 'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத் திட்டத்தின் ஒரு அங்கமாக கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் பொதுப் போக்குவரத்து நடைமுறைகளைச் சீர்செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கல்முனை பஸ் நிலையம், பொது நூலகம், அம்மன் கோவில் வீதி, தாளவட்டுவான் சந்தி, நற்பிட்டிமுனை புறநகர் பகுதி, கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை கல்முனை ஆதார வைத்தியசாலை ஆகிய இடங்களில் சட்டவிரோதமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்கள் உட்பட பாதசாரிகளுக்கு இடையூறாக நிர்மாணிக்கப்பட்டுள்ள சட்டவிரோத விளம்பர பலகைகள் மற்றும் படிக்கட்டுக்கள் ஆகியவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கைகளை கல்முனை தலைமையக பொலிஸார் மேற்கொண்டனர். ஒலிபெருக்கி வாயிலாக அறிவுறுத்தல்களை வழங்கினர்.

கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஜயராம் ட்ரொக்ஸி, கிழக்கு மாகாண புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜெயசுந்தர ஆகியோரின் கலந்துரையாடலின் பின்னர் கல்முனை பிராந்தியத்தில் கட்டம் கட்டமாக உரிய உரிய திணைக்களங்கள் கல்முனை மாநகர சபை என்பவற்றுடன் இணைந்து பொதுப் போக்குவரத்து நடைமுறைகள் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கையானது அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எச். சமூத்திர ஜீவ கண்காணிப்பின் கீழ் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.ஜி.டி.எஸ். அமரசிங்க ஆலோசனைக்கு அமைய கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசார் வழிநடத்தலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்சீன் பக்கீர் தலைமையில் மோட்டார் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான பி.ரி. நஸீர் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றார்.

எதிர்வரும் காலங்களில் இப்பகுதிகளில் பொதுப் போக்குவரத்து சேவைகளுக்கு இடையூறு விளைவிப்பவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதிகரித்துவரும் போக்குவரத்து நெருக்கடியைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் புதிய கட்டுப்பாடுகளை அமுல்படுத்தவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தவிர கடந்த காலங்களில் பாடசாலைக்கு செல்லும் மற்றும் பாடசாலையை விட்டு வீடு செல்லும் நேரங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதனால் மாணவர்கள், ஆசிரியர்களின் போக்குவரத்து சிரமங்களை தவிர்ப்பதற்காக போக்குவரத்தைச் சீர்செய்வதற்கு அண்மைக் காலமாகக் கலந்துரையாடல்கள் பல்வேறு மட்டங்களில் இடம்பெற்று உரிய நடவடிக்கைகள் எடக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான உள சமூக வலுவூட்டல் செயலமர்வு!



**(பழுவூரான்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான உள சமூக வலுவூட்டல் செயலமர்வு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளீதரன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆர்.முரளீஸ்வரனின் பங்குபற்றுதலுடன் மாவட்ட முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி இணைப்பாளர் முரளிதரனின் ஒழுங்கு படுத்தலின் கீழ் வைத்தியர் சதுர்முகம் மண்டபத்தில் இன்று சனிக்கிழமை (29) இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஆகியன இணைந்து முன்பள்ளி ஆசிரியர்களின் தொடர்பாடல் மற்றும் உளநல ஆற்றுப்படுத்தலை மேம்படுத்துவதற்கான ஒரு நாள் பயிற்சி செயலமர்வை ஒழுங்கு செய்திருந்தன.

மாவட்டத்தில் 563 முன்பள்ளிகள் இயங்கி வருகின்ற நிலையில் ஆரம்பக்கட்டமாக மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 71 முன்பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் இந்தச் செயலமர்வில் பங்குபற்றினர்.

இந்தச் செயலமர்வில் முன்பள்ளி ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடுகளின் போது எவ்வகையான உளவியல் முறைகளை பயன்படுத்தல், பிள்ளைகளின் நடத்தையில் மாற்றத்தை அவதானித்தல், தொடர்பாடல் மற்றும் உளநல ஆற்றுப்படுத்தல் போன்ற பல உளவியல் சார் நுட்பங்கள் தொடர்பில் இதன்போது விளக்கமளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உளநல மருத்துவர் திருமதி ஜெ. சகாயதர்ஷினி, மட்டக்களப்பு கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அனுரேகா, அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.அனுரேகா, திருமதி சுபாநந்தினி மாவட்ட உளவளத் துணை இணைப்பாளர் திருமதி சுபாநந்தினி எனப் பலர் கலந்து கொண்டனர்.



# சர்வதேச மனித உரிமைகள் அமைதி மாநாடு கொழும்பில்!

**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

மனித உரிமைகள் மூலம் அமைதியைப் பாதுகாப்போம் என்ற தொனிப் பொருளில் சர்வதேச மனித உரிமைகள் அமைதி மாநாடு கொழும்பில் இடம் பெற்றது.

சர்வதேச மனித உரிமைகள் அமைதிப் பணி என்பது சர்வதேச, பிராந்திய மற்றும் தேசிய மட்டங்களில் சுதந்திரம், கண்ணியம், சமத்துவம், நீதி மற்றும் பிற அடிப்படை மதிப்புகள் உள்ளிட்ட மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பாகும்.

இந்த அமைப்பை உருவாக்குவதில் முன்னணியில் இருந்த அமைப்பு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் சங்கங்கள் கட்ட ளைச் சட்டத்தின் 123 ஆம் அத்தியாயத்தின் பிரிவு 3 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதாகும். தற்போது, சர்வதேச மனித உரிமைகள் அமைதிப் பணி ஐக்கிய நாடுகள் சபையின் ஐ.நா. கூட்டாளர் போர்ட்டலின் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும்.

சர்வதேச மனித உரிமைகள் அமைதி பணி செயலாளர், ஸ்ரீ லங்காபிமான்ய, தேஷாமன்ய, தேசபந்து, தேஷாகீர்த்தி, லங்கா திலகா, கீத்ரி ஸ்ரீ ஜனரஞ்சனா, லங்காபுத்ரா, சமூக சேவை கீர்த்தி, சமூக சேவை நலநோன்பு விஷாரதா, தூதுவர், பேராசிரியர், டாக்டர் இர்ஷாத் அகமத் மிஷன் தொடர்பில் கருத்துரை வழங்கினார்.

இந்த நிகழ்வில் அதிதிகளாக, பேபிளியான சுநேத்ரா தேவி ரஜமஹா விகாரை ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே ஸ்ரீ கல்யாணி சமகிரிதர்ம மகா சங்க சபை மற்றும் கல்கொட ஸ்ரீ மஹா விகாரை பார்ஸ்வே சங்க சபையின் பிரதம அமைப்பாளர் ஷாசன கீர்த்தி ஸ்ரீ சதர்ம வாகீஸ்வராச்சார தர்ம கீர்த்தி ஸ்ரீ தர்மதாஜ விசித்ரானக சுமண தம்ம ஹிமிப்பானன், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக பாலி மற்றும் பௌத்த கற்கைகள் துறைத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் அதி பூஜனிய எலமல் தெனியே சரநந்த நாயக்க மகா தேரோத்ரா, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் தர்ஷனபதிகளுபஹன பியரதன தேரர், அமெரிக்க போதகர் மற்றும் கிண்டர் கலாச்சாரத்தின் தலைவர் போப் வோல்க்கர், அகில இலங்கை சூஃபி ஆன்மீக சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர், தேஷ்மான்யா டாக்டர் எம்.முசின் அப்துல்லா மவ்லவி, பொலிஸ் திணைக்களத்தின் சட்டப் பிரிவின் பணிப்பாளர், பிரதான பொலிஸ் பரிசோதகர் சம்பத் பிட்டியகுபுர, 2023 ஆம் ஆண்டு இந்தியாவின் கோவாவில் நடைபெற்ற சர்வதேச இராஜ தந்திர மாநாட்டில் சிறந்த பிரதிநிதியாக பெயரிடப்பட்ட இலங்கை உச்ச நீதிமன்றத்தின் சட்டத்தரணியும்,ஆப்பிரிக்காவுடன் இணைந்த நைல் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் பதிவு செய்யப்பட்ட யூரேசிய வளாகத்தில் சட்டக் கற்கைகள் துறைத் தலைவர்.சாமக சமரகோன், அகில இலங்கை மஸ்ஜிதுல் உலமா தலைவர் தேச கீர்த்தி மௌலவி முஹம்மட் சிராஜுதீன், தஃப்தார் ஜெய்லானி முஹ்யித்தீன் மஸ்ஜித், பொருளாளர் தேச பிரிதி முகம்மது சிக்கந்தர் ஸ்காலர்ஸ் தொண்டு அமைப்பின் தலைவர் தேஷ்மான்யா எம்.எஸ்.எம்.ஜிப்ரி, பொரளை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய பிரதம பூசகரும் பொரளை தெமட்டகொட கோவில்களின் புரவலருமான சர்வதேச பௌத்த சம்மேளன பொரளை பிரிவின் சமாதான குழுவின் பிரதான இந்து சமய ஆலோசகர் ஐக்கிய இலங்கை பிரத்யங்கிரா பீடத்தின் தலைவர் சமூக பொலிஸ் ஆலோசகர் ஐக்கிய மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பின் இந்து சமய பணிப்பாளர், லங்கா புத்ரா கீர்த்தி எஸ். விநாயகன் குருக்கள், அகில இலங்கை சூஃபி ஆன்மீக சங்கத்தின் நிறுவனர் மற்றும் செயலாளர் நாயகம் தேஷ்மான்ய விஷாரத டி.சிராஸ் சம்சுதீன், சர்வதேச மனித உரிமைகள் அமைதிப் மிஷனின் தலைமை ஆலோசகர் டாக்டர். பிரீதி குலதுங்க உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.





# இயக்கச்சியில் பனை மரங்களை அழித்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை

(த.சுபேசன்)

பளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இயக்கச்சிப் பகுதியில் நூற்றுக் கணக்கான பனை மரங்களை எந்தவொரு அனுமதியும் இன்றி பிடுங்கி அழித்தவர்கள் மீது பனை அபிவிருத்திச்சபை சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆலயக் காணி ஒன்றில் காணப்பட்ட பனை மரங்களே இவ்வாறு அனுமதி இன்றி சட்டவிரோதமாக அழிக்கப்பட்டன. இந்த நிலையில் அது தொடர்பாக பனை அபிவிருத்திச் சபைக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் வியாழக்கிழமை பளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் வி.சகாதேவன் கருத்துத் தெரிவிக்கையில்,

இயக்கச்சிப் பகுதியில் அதிகளவான பனை மரங்கள் எந்தவொரு அனுமதியும் இன்றி தன்னிச்சையான அழிக்கப்பட்டுள்ளன. இது மிக மோசமான செயற்பாடு. இது தொடர்பாகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பனை வளத்தை அழிப்பவர்கள் தொடர்பாக பொது மக்கள் பனை அபிவிருத்திச் சபைக்கு அல்லது பிரதேச செயலகத்துக்கு முறைப்பாடு வழங்க முன்வர வேண்டும்.

நாம் மிகச் சிரமப்பட்டு பனை வளத்தை மீட்டெடுத்து வருகிறோம். அதற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் இவ்வாறான சில செயற்பாடுகள் காணப்படுகின்றன.

பனை வளத்தை அழிப்பவர்கள் யாராக இருந்தாலும் இரக்கம் காட்டப்பட மாட்டாது. அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்.– என்றார்.





# பெண்கள் எதிர்நோக்கும் சமூகமட்ட பிரச்சினை தொடர்பான கலந்தாய்வு

(த.சுபேசன்)

பெண்கள் எதிர்நோக்கும் சமூக மட்டப் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் விழுது நிறுவன நிகழ்ச்சித் திட்ட அதிகாரி இந்துமதி ஹரிஹர தாமோதரன் தலைமையில் இடம்பெற்றது.

விழுது நிறுவனம் மற்றும் இலங்கையில் சமூக ஒருமைப்பாடு மற்றும் சமாதானத்தை வலுப்படுத்தல் ஆகிய அமைப்புக்கள் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜேர்மன் பெடரல் வெளிநாட்டு அலுவலகம் ஆகியவற்றின் நிதி அனுசரணையுடன் இலங்கை அரசுடன் இணைந்த செயற்றிட்டத்தின் கீழ் மேற்படி கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது அரசியலில் உட்பிரவேசிக்கும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள், நுண்நிதி கடன்களால் பெண்கள் எதிர்நோக்கின்ற பிரச்சினைகள், இளைஞர்கள் மத்தியில் காணப்படுகின்ற போதைப்பொருள் பாவனையால் சமூக மட்டத்திலும் குடும்பங்களிலும் ஏற்படுகின்ற வன்முறைகள், பெண்கள் எதிர்நோக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்டன.

மேற்படி கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.சசீலன், மருத்துவ பீட பீடாதிபதி சுரேந்திரகுமாரன், டாக்டர் ஜீவகாந்தன், டாக்டர் கமலகுமாரி கருணாநிதி, பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், போதைப் பொருள் தடுப்புப் பிரிவு உத்தியோகத்தர்கள், அமரா பெண் தலைமைக் குடும்பப் பெண்கள், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் யாழ். மாவட்ட சமாச அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மியன்மார் நில அதிர்வில் சிக்கி பலியானோர் 1,002 ஆக உயர்வு



மியன்மரில் ஏற்பட்ட நில அதிர்வில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,002 ஆக உயர்ந்துள்ளது.

2,376 பேர் காயமடைந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. மேலும் 30 பேர் காணாமல் போயுள்ளனர்.

காணாமல் போனவர்களை மீட்கும் நடவடிக்கைகளுக்காக சீனா மீட்பு குழுவொன்றை அனுப்பியுள்ளது.

இந்த மீட்பு குழுவில் வைத்தியர்களும் அடங்குகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, 37 பேர் கொண்ட சீன மீட்பு குழு இன்று மியன்மாரை சென்றடையவுள்ளது.

மியன்மாருக்கு அவசர மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு சீனா தயாராகவுள்ளதாக சீன வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை உணவு, போர்வைகள், மருந்து , மின்பிறப்பாக்கி என 15 தோ நிவாரண பொருள்களை இந்தியா மியன்மாரில் பாதிக்கப்பட்டவர்களுக்காக அனுப்பியுள்ளது.

மியன்மார் தற்போது எதிர் நோக்கியுள்ள சவாலான நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் தெரிவித்துள்ளன.

நியூசிலாந்து அரசாங்கம், மியன்மாரின் தற்போதைய அவசரகால நிலையைக் கருத்திற்கொண்டு 2 மில்லியன் நியூசிலாந்து டொலரை நிதியுதவியாக வழங்கியுள்ளது.

இதேவேளை இந்த துயரச் சம்பவத்திற்கு அனுதாபம் தெரிவித்துள்ள அவுஸ்திரேலிய அரசாங்கம் தற்போதைய நிலைமையைக் கண்காணித்து வருவதாகத் தெரிவித்துள்ளது.



# கார்களின் விலையை அதிகரிக்கக் கூடாது

## ட்ரம்ப் எச்சரிக்கை



வெளிநாடுகளில் இருந்து அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் கார்களுக்கான வரியானது 25 சதவீதம் அதிகரித்துள்ள காரணத்தால் உள்நாட்டில் கார்களுக்கான விலையை அதிகரிக்கக் கூடாது என அமெரிக்காவில் உள்ள கார் நிறுவனங்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

ட்ரம்ப் பதவியேற்றதன் பின்னர் நாட்டின் செலவுகளை குறைப்பதற்காக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறார்.

அந்த வகையில் கனடா, இந்தியா, சீனா, மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து , அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யும் கார்களுக்கு 25 சதவீத வரியை ட்ரம்ப் விதித்துள்ளார்.

இந்நிலையில் உள்நாட்டு கார்களுக்கான விலையை கார் நிறுவனங்கள் அதிகரிக்க கூடாது என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

மேலும் பொருளாதாரத்தை மேம்படுத்தும் தனது செயற்பாடுகளுக்கு உள்நாட்டு நிறுவனங்கள் ஒத்துழைக்க வேண்டுமெனவும், இதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியும், விற்பனையும் அதிகரிக்க முடியும் எனவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

# பா.ஜ.க. பக்கம் சாய்ந்தது அ.தி.மு.க; என்ன செய்யப் போகிறது த.வெ.க?



அ.தி.மு.கவுடன் கூட்டணி, 50 இற்கு மேற்பட்ட தொகுதிகள், துணை முதல்வர் பதவி, தமிழகத்தின் பவன் கல்யாண் என்றெல்லாம் த.வெ.க. பற்றி வலம் வந்த யூகங்கள் எல்லாம் சுக்கு நூறாகியிருக்கிறது. மீண்டும் பா.ஜ.கவுடன் கைகோக்க தயாராகிவிட்டது அ.தி.மு.க. அப்படியானால் த.வெ.க இனி என்ன செய்யும்? பாசிச கட்சி என பா.ஜ.கவையும், பாயாச கட்சி என தி.மு.கவையும் குறிவைத்து தாக்கி வருகிறார் விஜய்.

அதேசமயம், அ.தி.மு.கவை பற்றியோ, அதன் கடந்த கால ஆட்சி பற்றியோ விஜய் மூச்சுவிடவில்லை. இதனால் அவர், அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைக்க திட்டமிடுவதாக செய்திகள் கசிந்தன. இதை உறுதிப்படுத்தும் வகையில் இரு தரப்புக்கும் இடையில் இரகசிய பேச்சுவார்த்தைகளும் நடந்தன.

த.வெ.கவின் பெரும்பாலான மாவட்டச் செயலாளர்கள் ரசிகர் மன்றத்திலிருந்து வந்தவர்கள். எனவே, 2026 இல் அ.தி.மு.கவுடன் சேர்ந்து தேர்தலைச் சந்தித்தால், கணிசமான தொகுதிகளும் கிடைக்கும், நம்மவர்களுக்கும் அரசியல் அனுபவம் கிடைக்கும் என்பதே த.வெ.கவினரின் எண்ணவோட்டமாக இருந்தது.

அ.தி.மு.கவும் த.வெ.கவை சேர்த்துக் கொண்டு தேர்தலை சந்திக்கலாம் என்ற மனநிலையிலேயே இருந்தது. எல்லாம் சரியாக போய்க் கொண்டிருந்த நேரத்தில் தான் ஆதவ் அர்ஜுனா த.வெ.கவுக்குள் வந்தார். அதோடு பிரசாந்த் கிஷோரையும் கொண்டுவந்தார்.

த.வெ.கவின் 2 ஆம் ஆண்டு விழாவில் பேசிய பிரசாந்த் கிஷோர், "விஜய் அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைக்காமல் தனித்தே போட்டியிடுவார். அவர் 2026 இல் தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைப்பார்" என்று பற்ற வைத்தார். ஆனால், அது த.வெ.கவின் கருத்தல்ல என அவசரமாக மறுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அ.தி.மு.கவிடம் சரிபாதி தொகுதிகள், ஆட்சியில் சரிபாதி பங்கு என நடைமுறை சாத்தியமில்லாத கோரிக்கைகளை த.வெக வைத்தது. இதில் அதிர்ச்சியடைந்த அ.தி.மு.க, தனது ரூட்டையே மாற்றிவிட்டது. 2026 இல் பா.ஜ.க, பா.ம.க, த.மா.கா, தே.மு.தி.க. ஆகிய கட்சிகளை உள்ளடக்கிய பலமான கூட்டணியை உருவாக்கும் முனைப்பில் அ.தி.மு.க. இப்போது இருக்கிறது.

இந்த நிலையில், விஜய் எப்படி 2026 தேர்தலை சந்திப்பார் என்ற கேள்வி எழுந்துள்ளது. தொடக்கத்தில் விஜய், தி.மு.க. கூட்டணியில் உள்ள வி.சி.க, கம்யூனிஸ்ட்டுகளை இழுத்து கூட்டணி அமைக்க காய் நகர்த்தினார், அது நடக்கவில்லை. அடுத்து, அதிமுக கூட்டணி வாய்ப்பும் போய்விட்டது. இனி விஜய் பக்கம் உள்ள ஒரே வாய்ப்பு சீமான் தான்.

ஆனால் சீமானும் சமீபமாக பெரியார் பேரைச் சொல்லி விஜய்யை கடுமையாக விமர்சிக்கிறார். இருப்பினும் ஒரு வழியாக த.வெ.க – நா.த.க. கூட்டணியை அமைக்க முயற்சிகள் நடப்பதாக சொல்லப்படுகிறது. அதுவும் நடக்கவில்லை என்றால், வேறு வழியே இல்லாமல் 234 தொகுதிகளிலும் த.வெ.க. தனித்தே போட்டியிட்டு ஆக வேண்டும்.

பா.ஜ.கவையும் இணைத்து அ.தி.மு.க. உருவாக்கும் கூட்டணியால் த.வெ.கவுக்கு ஒரு நன்மையும் கிடைத்துள்ளது. அதாவது தி.மு.க, பா.ஜ.க. ஆட்சிக்கு எதிரான மனநிலையில் உள்ள சிறுபான்மையினர் மற்றும் அரசு ஊழியர்கள், இளைஞர்கள் வாக்குகள் விஜய்க்கு கிடைக்கலாம். ஆனால், அது வெற்றிபெறும் அளவுக்கு இருக்குமா என்பதுதான் கேள்வி.

இதுகுறித்து பேசிய த.வெ.க. நிர்வாகிகள், "அ.தி.மு.கவுடன் நாங்கள் கூட்டணி பேசியதாக எதன் அடிப்படையில் சொல்கிறார்கள் எனத் தெரியவில்லை. அதேசமயம், தமிழகத்தில் மாற்றத்துக்கான ஆட்சியை உருவாக்க வலுவான கூட்டணி அமைக்கும் முன்னெடுப்புகளும் நடந்து வருகின்றன.

தனித்தே 234 தொகுதிகளிலும் போட்டியிடவும் நாங்கள் தயார்தான். தேர்தலுக்கு இன்னும் ஒரு வருடம் இருக்கிறது, அதற்குள் காட்சிகள் மாறும், பொறுத்திருந்து பாருங்கள்" என்கின்றனர்.

# ரம்ஜான், புனித வெள்ளி தினத்தில் மதுக் கடைகளை மூடவேண்டும்

## சீமான் வலியுறுத்தல்



ரம்ஜான், புனித வெள்ளி தினத்தில் மது கடையை மூடவேண்டும் என சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்ட அறிக்கையில்,

"ரம்ஜான், புனித வெள்ளி அன்று மதுக்கடை களை மூட வேண்டும் என்ற நெடுநாள் கோரிக்கையை தமிழக அரசு ஏற்க மறுப்பது மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது.

தமிழகத்தில் மிகக் குறைந்தஅளவில் உள்ள சமணர்களின் திருவிழாவான மகாவீரர் ஜெயந்தியை முன்னிட்டு மதுக் கடைகளையும், இறைச்சிக் கடைகளையும் மூட உத்தர விடும் தமிழக அரசு, அவர்களைவிட பெரும்பான்மை சமயத்தினரான கிறிஸ்தவ, முஸ்லிம் மக்களின் கோரிக்கைக்கு சிறிதும் மதிப்பளிக்காதது வன்மையான கண்டனத்துக்குரியது.

குறிப்பிட்ட சமய மக்களின் உணர்வுகளுக்கு ஆதரவாகவும், சிலருக்கு எதிராகவும் அரசு செயல்படுவது சிறிதும் அறமற்றது. எனவே கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்களின் உணர்வுக்கு மதிப்பளிக்கும் வகையில் புனித வெள்ளி, ரம்ஜான் பண்டிகை அன்று, தமிழகம் முழுவதும் மதுக்கடைகளை மூடவேண்டும். இதற்கான அரசாணையை நடப்பு சட்டப்பேரவை கூட்டத்தொடரிலேயே வெளியிட வேண்டும்." என்று வலியுறுத்தியுள்ளார்.

# கனடா முரசு

பக்கங்கள் - 3

சனிக்கிழமை 29/03/2025


## அமெரிக்கா பயணிப்போருக்கான வழிகாட்டுதலை புதுப்பித்தது கனடா



C2 ▶



# தமிழினப் படுகொலை அறிவூட்டல் வாரம் சட்டமூலத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கனடாவில் தள்ளுபடி

தமிழினப் படுகொலை அறிவூட்டல் வாரம் என்று அழைக்கப்படும் சட்டமூலம் 104 ஐ எதிர்த்து இலங்கை குழுக்கள் தாக்கல் செய்த வழக்கை கனேடிய உச்ச நீதிமன்றம் நிராகரித்து தள்ளுபடி செய்துள்ளதாக ஒன்றாறியோ மாவட்ட சட்டமற்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டம் ஒவ்வொரு ஆண்டும் மே 18 ஆம் திகதியையும் ஒன்றாறியோவில் தமிழ் இனப்படுகொலை அறிவூட்டல் கிழமையாக குறிப்பிடப்படுகிறது.

மே 2009 இல் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் இறுதிக் கட்டங்களில் படுகொலை செய்யப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் பொது மக்களை நினைவுகூரும் நேரமாக இது அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

C2 ▶

# கனேடிய பொதுத் தேர்தலில் களமிறங்கும் தமிழர்கள்


கனேடிய பொதுத் தேர்தலில் நான்கு தமிழ் பேசும் வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனேடிய பொதுத் தேர்தலில் ஏப்ரல் 28 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்தநிலையில், தேர்தலில் களமிறங்கவுள்ள தமிழ் வேட்பாளர்களில் இருவர் லிபரல் கட்சி சார்பிலும், இருவர் கன்சர்வேட்டிவ் கட்சி சார்பிலும் களமிறங்குகின்றனர்.

C2 ▶





# அமெரிக்காவுக்கு பயணிப்போருக்கான வழிகாட்டுதலைப் புதுப்பித்தது கனடா

அமெரிக்காவிற்கு பயணிக்க விரும்பும் கனேடியர்களுக்கான வழிகாட்டுதலை கனடா புதுப்பித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் சில கொள்கைகள் காரணமாக இந்த மாற்றம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஏப்ரல் 11ஆம் திகதி முதல், அமெரிக்காவில் 30 நாள்களுக்கும் அதிகமாக தங்கவிருக்கும் கனேடியர்கள் அமெரிக்க அதிகாரிகளிடம் பதிவு செய்ய வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதனை செய்யப்படவில்லை என்றால் அபராதம், தண்டனை, அல்லது குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக வாய்ப்பு உள்ளதாக கனடாவின் சுற்றுலா அறிவிப்பு குறிப்பிடுகின்றது.

இதற்கு முன்னர் இந்த விதி நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதுடன் "Protecting the American People Against Invasion" (அமெரிக்க மக்களை ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்கும் ஆணை) என்ற ட்ரம்பின் உத்தரவை முன்னிட்டு இதை அமெரிக்க அரசு கடுமையாக செயல்படுத்தியுள்ளது.

மேலும், அமெரிக்க எல்லையில் விசா மற்றும் ஆவணங்கள் தொடர்பான பிரச்சினைகளால் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அதேசமயம், கடவுச்சீட்டில் பிறக்கும்போது பதிவுசெய்யப்பட்ட பாலின தகவல் மட்டுமே இருக்க வேண்டும் என்ற ட்ரம்பின் உத்தரவால் Transgender மற்றும் Bisexual சேர்ந்த நபர்கள் அமெரிக்கா பயணிக்க முன்வைக்கப்பட்டுள்ள தடைகள் குறித்து ஐரோப்பிய நாடுகளும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

மேலும், கனடா - அமெரிக்கா இடையே வர்த்தக மோதலும், கனடாவை அமெரிக்காவின் 51ஆவது மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற ட்ரம்பின் கருத்தும் இரு நாடுகளுக்கிடையே பதற்றத்தை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

**தமிழினப் படுகாலை...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில், 2021ஆம் ஆண்டு ஒன்ராறியோ சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட இந்த 104 சட்டத்தை ரத்து செய்யும்முயற்சியில்பலசிங்களஅமைப்புகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த முயற்சிகள் தமிழர் துன்பங்களை அழிக்கவும் அங்கீகாரத்தைத் தடுக்கவும் நோக்கமாகக் கொண்ட மறுப்பு பிரச்சாரம் என்று தமிழ் கனேடிய அமைப்புகளும் சட்ட வல்லுநர்களும் பரவலாகக் கண்டனங்களை வெளியிட்டு வந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில், ஒன்ராறியோ நீதிமன்றங்களில் இந்தச் சட்டத்தை ரத்து செய்வதற்காக, தொடர் தோல்வியடைந்த சட்ட முயற்சிகளைத் கருத்தில் கொண்டு, கனேடிய உச்ச நீதிமன்றம் இந்த வழக்கை தள்ளுபடி செய்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள சட்டமற்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம், இது கனடாவிலும் உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களுக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியென தெரிவித்துள்ளார்.

அத்தோடு, முதல்வர் டக் போர்ட், தனது சட்டமன்ற சகாக்கள், 60க்கும் மேற்பட்ட தமிழ் அமைப்புகள், சமூக உறுப்பினர்கள் மற்றும் குறிப்பாக மசோதா 104 ஐ பாதுகாக்க அயராத முயற்சிகள் எடுத்த தமிழ் இளைஞர்களுக்கும் தான் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடா உச்ச நீதிமன்றத்தின் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பானது, இழந்த அப்பாவி உயிர்களை அங்கீகரிப்பதாகவும் தமிழ் இனப்படுகொலைக்கான நீதிக்கான உலகளாவிய இயக்கத்தில் ஒரு மைல்கல்லாக செயல்படும் என்றும் விஜய் தணிகாசலம் மேலும் கூறியுள்ளார்.

---

**கனேடிய...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த லிபரல் அரசாங்கத்தில் அமைச்சராக பணியாற்றிய கரி ஆனந்தசங்கரி ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியில் மீண்டும் போட்டியிடுகிறார்.

அத்துடன், மார்க்கம் நகரசபையின் 7ஆம் வட்டார உறுப்பினராக பணியாற்றும் ஜ/வொனிற்றா நாதன், புதிய முகமாக மார்க்கம் பிக்கரிங்-புரூக்ளின் தொகுதியில் லிபரல் கட்சி சார்பில் களமிறங்குகிறார்.

கன்சர்வேட்டிவ் கட்சி சார்பில் மார்க்கம் தோர்ண்ஹில் தொகுதியில் லைனல் லோகநாதன் போட்டியிடுகின்றார்.

முன்னாள் பொலிஸ் அதிகாரியான நிரான் ஜெயநேசன், அதே கன்சர்வேட்டிவ் கட்சி சார்பில் மார்க்கம்-யூனியன்வில் தொகுதியில் நிற்கின்றார்.

இந்த நான்கு தமிழ் வேட்பாளர்களுக்கும் வெற்றி வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

மேலும், தமிழ் சமூகத்தைச் சேர்ந்த சிலர், வெற்றி பெறுவதற்கு வேட்பாளர்கள் கடுமையாக உழைக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

# எலான் மஸ்கின் டெஸ்லா நிறுவனத்திற்கு கனடா வழங்கிய சலுகைகளை நிறுத்தியது





எலான் மஸ்கின் டெஸ்லா நிறுவனத்திற்கு கனடா அரசாங்கம் வழங்கிய அனைத்து சலுகைகளையும் நிறுத்தி உள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, டெஸ்லா நிறுவனத்திற்கு கனடா வழங்கிய 43 மில்லியன் டொலர் தள்ளுபடி தொகையை கனடா நிறுத்தி வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, மின்சார வாகனங்களுக்கான தள்ளுபடித் திட்டங்களில் இருந்து டெஸ்லா நிறுவனத்தை ஒதுக்கி வைத்துள்ளதாகவும் கனடா போக்குவரத்து துறை அமைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு கோரிக்கையும் தனித்தனியாக ஆராயப்பட்டு சரிபார்க்கப்படும் வரை டெஸ்லா நிறுவனத்திற்கு எந்த தள்ளுபடி தொகையும் வழங்கப்படாது என்றும் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 28 ஆம் திகதி கனடாவில் பொதுத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் அதற்கு முன்னதாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, இந்த மாத தொடக்கத்தில் அமெரிக்காவுடனான வர்த்தக பிரச்சனைகள் காரணமாக வாடகை டாக்ஸிகள் அல்லது சவாரி பகிர்வு நிறுவனங்கள் டெஸ்லா கார்களை வாங்குவதற்கு ஒன்டாரியோ மாகாணம் நிதிச் சலுகை வழங்குவதை நிறுத்தியது.

அமெரிக்காவுடனான கனடாவின் உறவு முக்கிய பிரச்சனையாக உருவெடுத்துள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதனுடன் இந்த அறிவிப்பு குறித்து டெஸ்லா நிறுவனம் உடனடியாக பதிலளிக்கவில்லை என குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், கனடா நாட்டிலிருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பெரும்பாலான பொருள்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

மேலும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நெருங்கிய கூட்டாளியான டெஸ்லா தலைமை நிர்வாக அதிகாரி எலான் மஸ்க், அரசாங்க செயல்திறன் துறையின் தலைவராக, கூட்டாட்சி அரசாங்கம் மற்றும் பட்ஜெட்டை குறைக்க வெள்ளை மாளிகை எடுக்கும் முயற்சிக்கு தலைமை தாங்கி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான ஆழமான உறவுகளின் சகாப்தம் முடிந்துவிட்டது

## பிரதமர் மார்க் கார்னி தெரிவிப்பு



கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான ஆழமான பொருளாதார, பாதுகாப்பு மற்றும் இராணுவ உறவுகளின் சகாப்தம் முடிந்துவிட்டதாக பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிற்கு வாகன இறக்குமதிக்கு ட்ரம்ப் திட்டமிட்டுள்ள 25 சதவீத வரி அடுத்த வாரம் நடைமுறைக்கு வர உள்ளது, மேலும் இது 500,000 வேலைகளை ஆதரிக்கும் கனேடிய வாகனத் தொழிலுக்கு பேரழிவை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்படுகிறது.

ட்ரம்பின் இந்த அறிவிப்புக்கு பிறகு, ஏப்ரல் 28 அன்று கனடாவின் தேர்தலுக்கு முன்னதாக கார்னி தனது பிரச்சாரத்தை இடைநிறுத்தி, அமெரிக்காவுடனான வர்த்தகப் போரில் தந்திரோபாயங்களில் பணிபுரியும் அமைச்சரவை உறுப்பினர்களின் கூட்டத்திற்காக ஒட்டாவாவுக்குத் திரும்பினார்.

அதன்போது, ட்ரம்பின் வாகனங்கள் மீதான வரி நியாயமற்றது என்றும் அவை நாடுகளுக்கு இடையே இருக்கும் வர்த்தக ஒப்பந்தங்களை மீறுவதாகவும் பிரதமர் கார்னி சுட்டிக்காட்டியிருந்தார்.

அத்தோடு, ட்ரம்ப் அமெரிக்காவுடனான உறவுகளை நிரந்தரமாக மாற்றியமைத்துவிட்டார் என்றும், எதிர்காலத்தில் எந்தவொரு வர்த்தக ஒப்பந்தங்கள் இருந்தாலும், பின்வாங்க முடியாது என்றும் அவர் கனடியர்களை எச்சரித்துள்ளார்.

இதன்படி, "தங்கள் பொருளாதாரங்களின் ஆழமான ஒருங்கிணைப்பு மற்றும் வலுவான பாதுகாப்பு மற்றும் இராணுவ ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்ட அமெரிக்காவுடன் தாங்கள் கொண்டிருந்த பழைய உறவு முறிந்து விட்டதாக கார்னி தொடர்ந்தும் கூறியுள்ளார்.

இதேவேளை, வாகன வரிகளுக்கு கனடா பதிலடி கொடுக்கும் என தெரிவித்த பிரதமர் மார்க் கார்னி, இம்முறை போராடுவது, பாதுகாப்பது, கட்டியெழுப்புவது என்பவையே பதிலடியாக இருக்கும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், அமெரிக்காவில் அதிகபட்ச தாக்கத்தையும் கனடாவில் குறைந்தபட்ச தாக்கங்களையும் ஏற்படுத்தும் எங்கள் சொந்த பழிவாங்கும் வர்த்தக நடவடிக்கைகளுடன் அமெரிக்க வரிகளை எதிர்த்துப் போராடுவதாக பிரதமர் கார்னி உறுதியளித்துள்ளார்.